

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## நம் காலத்தை ஆண்டவரிடம் தருவதே நலம்!

நடுவதற்கு ஒரு காலமும், நட்டதை அறுவடை செய்திட ஒரு காலமும் உண்டு! (பிர.3:2). இந்த இரண்டாவது "அறுவடை" மகிழ்ச்சியின் காலத்திற்கு இடையில் சில மாதங்கள் நடைபெறும் களை எடுப்பு, நீர்ப்பாய்ச்சுதல் போன்ற பண்படுத்தும் செயல் நடைபெறும் என நாம் அறிவோம். அதுபோலவே அழ ஒரு காலம், புலம்ப ஒருகாலம் முடிந்த பிறகு நகைப்பதற்கும், மகிழ்ந்து ஆர்ப்பரிப்பதற்கும் காலம் வருமென 4-ம் வசனம் கூறுகிறது. **துன்பத்திற்குப் பிறகு மகிழ்ச்சியின் ஆர்ப்பரிப்பு** வருவதற்கு முன்பாக, நம் உள்ளத்தை பண்படுத்தும் செயலாக, நாம் நொறுங்குண்டு தேவனை கிட்டிச்சேர்வதும், ஜெபிப்பதும், விசுவாசிப்பதும், பொறுமையாய் காத்திருப்பதுமான தேவனுடைய செயல் நடைபெற்றால் மாத்திரமே "மகிழ்ச்சி நிறைந்த ஆர்ப்பரிப்பின் காலத்தை" நாம் சுதந்தரித்திட முடியும்! ஆம், **'அதினதின் காலத்திலே' சகலத்தையும் தேவன் நேர்த்தியாய் செய்து முடிப்பார்** என விசுவாசித்து, அவர் கிரியை செய்யும்படி, **'நம் காலத்தை'** அவரிடம் தருவோமாக! (பிர.3:1,11).

*-tr*


பெட்டகம் 38 | மே 2022 | பரல்கள் 05



## "ஊழிய அழைப்பு" குருவாகிய இயேசு தரும் பாக்கியம்!

ஒருவன், தன் வீட்டிலுள்ள அனைவரையும் படிக்க வைத்து, திருமணம் செய்து வழி அனுப்பி விட்டு... தானும் நல்ல பென்ஷனோடு 'ரிடையர்டு' ஆகி... பின்பு உமக்கு தொண்டு செய்வேன்! என உத்தரவு கேட்டவனை இயேசு புறக்கணித்தார்! (லூக்.9:61). அவர்களை தேவராஜ்ய பணிக்கு "தகுதியற்றவர்கள்" என்றார். ஏனெனில், அவர்கள் எந்த நேரத்திலும், தங்கள் வீட்டு அலுவல்களுக்கு முதலிடம் கொடுத்து திரும்புவார்கள் என இயேசுவுக்குத் தெரியும்!

ஆனால், இளமையான பேதுருவையும் மற்ற சீஷர்களையும் தன் பணிக்கு இயேசு அழைத்தவுடன், தங்களுக்குரிய லாபமான மீனையும், வலையையும், படகையும் அல்லது தன்னை ஆதரிக்கும் தந்தையையும் "உடனே விட்டுவிட்டு" வரும் பாக்கியம் பெற்றிருந்தார்கள். **இவர்களே, அவருக்குச் சொந்தமான ஊழியர்கள்!** இவர்களுக்கே குருவாகிய இயேசு, நல்ல ஊழிய பயிற்சியும் தருவார்! 'தகப்பன் மரித்து அடக்கம் செய்திடும்' நியாயமான அவனது கடமைக்கு கூட "வேறு சிலரை அனுப்பி" தன் தாசனை பூமிக்குரிய யாதொரு கவலையும் தாக்காதிருக்கச் செய்வார்! (லூக்.9:60). ஏதோ காரணங்களுக்காக, தேவனுடைய மந்தையை மேய்ப்பதற்குத் தயங்கி, வேறு நாட்டம் ஏற்பட்டால், உடனே பேதுருவிடம் கூறியதைப் போலவே "இவைகளைப் பார்க்கிலும் என்னை நேசிப்பாயாக!" என திருத்துவார்! (யோ.21:17). இவ்வாறு குருவும், அவரது ஊழியனுமாய், இணைபிரியா உடன்படிக்கையில் பணி செய்யும் வேலையாட்கள் எங்கேயோ..... அங்கே தேவனுடைய பணி சிறக்கும்! அவரது நாமம் மகிமைப்படும்!!

*-Ed*


'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ.150.00

M.O அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell : 9843049935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## கிறிஸ்துவின் ஆசீர்வாத ஆழம்!

*தம்முடையவர்களை தேவன் அதிகமாய் நேசிக்கிறார்! அப்படியொரு சம்பவமே, கரையிலிருந்த தன் சீஷர்களைப் பார்த்து* "**ஆழத்திலே தள்ளிக்கொண்டு போங்கள்**" *என்ற சம்பவமாகும் (லூக்.5:4). எவ்வளவு ஆழத்தில்? என்ற அளவை ஆண்டவர் சொல்லவில்லை. அதுஏனென்றால், ஆழத்தின் மதிப்பு நம் ஒவ்வொருவரையும் சார்ந்திருக்கிறது. அவை என்னவென்றால்: 1) நாம் உலகமாகிய கடற்கரையை விட்டு முற்றிலும் வெளியே வந்துவிட்டோமா? 2) கரையை விட்டு கடலுக்குள் செல்லும் தேவையை எவ்வளவு உணர்ந்திருக்கிறோம்? 3) எவ்வளவு ஆழம் செல்ல நமக்குத் திராணி உண்டு? ஆகிய இந்த மூன்று பகுதிகளை அடிப்படையாகக் கொண்டே சார்ந்திருக்கிறது. ஒன்றை நீங்கள் அறிய வேண்டும்.... 'மீன்கள்' ஆழத்தில் மாத்திரமே காணப்படும், கரையோரமாய் அல்ல!*

**இவ்வாறாகவே நம் யாவருக்கும் இருக்கிறது. கரையை விட்டு ஆழமாய் சென்றவர்களுக்கே தேவன் தன்னுடையவைகளையும், தன்னோடு தன்னைப் பின்பற்றி வந்த தம்முடையவர்களின் தேவையையும் கொடுத்து ஆசீர்வதிக்கிறார்!**

*கரையை விட்டு எவ்வளவு ஆழம் செல்லுகிறோமோ, அந்த அளவிற்கே தேவனுடைய வார்த்தையில் அடங்கியிருக்கும் மகத்துவத்தை ஆராய்ந்து அறிய பாக்கியம் பெற்றிருக்கிறார்கள். அவர்களிடமே, ஆவியானவர் இறங்கி வந்து, அளவிட முடியாத ஆழ்ந்த சத்திய விளக்கங்களை அவர்களுக்குரிய திராணியின்படி போதித்து அர்த்தம் காணும்படி செய்கிறார். இதற்கு முன்பு, கரையின் ஓரத்தில் அவர்கள் இருந்தபோது, வேதத்தில் அவர்கள் கண்ட சத்தியங்கள் எவ்வளவு மேலோட்டமாய் இருந்தது என்பதைக் கண்டு அவர்களை ஆச்சரியமடையச் செய்கிறார்!*

*கிறிஸ்துவின் ஆழத்தில் : 1) அவருடைய இரத்தத்தின் மூலம் உண்டான பாவநிவாரண ஆழம் 2) பிதாவின் சித்தத்தை அறிந்து கொள்ளும் ஆழம் 3) பரிசுத்தாவியின் ஆழம் 4) தேவனுடைய நோக்கங்களின் ஆழம், ஆகிய இவைகள் அடங்கும்.*

**முதலாவதாக,** *பாவ நிவாரண ஆழத்தில், பழைய உடன்படிக்கையை போல் அல்லாமல் 'கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தை' மிக பிரகாசமாய் ஆவியானவர் எடுத்துக்காட்டுகிறார். 'அதுவரை' தேவன் தந்த பிராயசித்தத்தின் மகத்துவத்தை நாம் அறியாமலிருந்தோம். அவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் பிணி தீர்க்கும் ஔஷதமும், நம் பசிதீர்க்கும் ஆகாரமும், ஆத்துமத்தில் கொண்ட கசடுகளை அகற்றும் மாமருந்தும், நம் சரீரத்திற்கு மிகுந்த பலன் தரும் சர்வ வல்லமை நிறைந்ததாய் 'இந்த ஆழத்தை' கிறிஸ்துவின் இரத்தமே நமக்கு வழங்குகிறது.*

**இரண்டாவதாக,** *பிதாவின் சித்தம் அறிந்து கொள்ளும் ஆழத்தில், அவருடைய துல்லியமான மனதின் விருப்பத்தையும், மென்மையான நற்குணங்களையும், அளவிட முடியாத அவருடைய கண்காணிப்பையும், நம்மீது கொண்ட 'புத்திர சுவீகார' அக்கறையையும் நமக்குத் தெரியப்படுத்துகிறது!*

**மூன்றாவதாக,** *பரிசுத்தாவியின் ஆழத்திற்குள் நாம் பிரவேசித்த பிறகே, தேவன் நமக்கு பிரகாசமுள்ள இனிமையாய் மாறுகிறார்!*

**இந்த வசந்தமான ஆழ்கடலில், நாம் மூழ்கிச் சென்று 'நம்மையும், நம் சகல வேதனைகளையும்' களைந்து, அமைதியும் சமாதானமும் அவரின் நித்திய சமூகத்தில் நாம் பெற்றிட முடிகிறது!**

*பரிசுத்த ஆவியின் ஆழத்தில் இன்னும் அதிகமாய் செல்லும்போது, நம் ஜெபத்திற்கு அவர் தரும் ஆச்சரியமான பதிலையும், மிகுந்த கவனமுடன் போதித்து முன் செல்லும் நடத்துதலையும், தேவன் நம்முடைய தேவைகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் மேன்மையையும் நாம் காண முடிகிறது! அதுமாத்திரமல்லாமல் நமக்குச் சம்பவிக்கும் நிகழ்ச்சிகளை துல்லியமாய் அறிந்து வைத்து, அவைகளைக் கொண்டு, நித்திய மகிமையால் நாம் முடிசூட்டப்பட மறுரூபப்படுத்துகிறார்!*

**நான்காவதாக,** *தேவனுடைய முன்குறித்த நோக்கங்களையும், அவருடைய இராஜ்ஜிய வருகையின் ஆழங்களையும் அறிந்து கொள்கிறோம். 'அதுவரையில்' கர்த்தருடைய வருகையையும் அவருடைய ஆயிர வருட அரசாட்சியின் மேன்மையையும் நாம் அறியாதிருந்தோம். 'இப்போதோ' ஆழத்தின் வெளிச்சத்தில், வரப்போகும் புதிய யுகத்தின் பிரகாசத்தை நம் மனக்கண்களால் கண்டு அகமகிழ்கிறோம். கிறிஸ்துவின் வருகையும், அவர் நம்மை மகிமையால் முடிசூட்டும் மாட்சிமையும், நம் உள்ளத்தை இப்பொழுது மகிழச் செய்கிறது!*

**இப்போது சொல்லுங்கள் 'ஆழத்திலே தள்ளிக்கொண்டு போங்கள்' என்ற இயேசுவின் அறிவிப்பு உங்களுக்குள் எவ்வளவு நிறைவேறி இருக்கிறது?**

*எசேக்கியேல் 44-ம் அதிகாரத்தில் நாம் காணும் தரிசனத்தின்படி, ஆலயத்திலிருந்து கடந்து வந்த* **ஜீவ நதியின் ஆழத்தை** *முதலாவது அளந்தபோது 'கணுக்கால்' அளவே இருந்தது. இன்னும் சற்று ஆழத்திற்குள் சென்றபோது 'முழங்கால்' அளவு இருந்தது. அதை அடுத்த ஆழத்திற்குள் சென்றபோது 'இடுப்பளவு' இருந்தது. அதையும் கடந்து 'நீச்சல் ஆழத்திற்குள்' வந்துவிடுகிறோம்! பின்பு அந்த நதி, யாராலும் அளக்க முடியாத, பிரகாசமாய் பாய்ந்திடும் நதியாய் மாறிவிட்டது!*

*இந்த ஜீவ நதியில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம்? மண்ணுக்குரிய வாழ்க்கையில், 'தன்னை' முற்றிலுமாய் அழித்தவனையே பரிசுத்த ஆவியானவர் தேடுகிறார்! கணுக்கால் ஆழமோ, முழங்கால் ஆழமோ இடுப்பளவு ஆழமோ மாத்திரமல்ல! 'அவனையே முற்றிலும் இழுத்துக்கொள்ளும்' ஆழம்! இதுவே நாம் சென்று அடைய வேண்டிய ஆழத்தின் இலக்கு!! எவ்வளவு ஆழத்திற்குள் சென்றீர்கள்? என்ற அளவுகோலை வைத்திருக்கும் தேவன், நம் அருகிலேயே இருக்கிறார்! இதை அறிந்தவர்களாய், இப்போது இருக்கும் ஆழத்தைக் கடந்து, மூழ்கும் ஆழத்திற்குள் போவோமாக! அதுவே, நாம் கிறிஸ்துவுக்குள் அடைந்திட வேண்டிய சம்பூர்ண ஆசீர்வாதம்!*

*- Mrs.சார்லஸ் கஃப்மென்*

---

## தேவன் விரும்பும் "மெய் ஆராதனை!"

*தெய்வ ஆராதனையை உடனே விளக்கிச்சொல்ல "அதை ஒருவன் தன்* **இருதயத்தில் உணர வேண்டும்!"** *என்பதேயாகும். ஆராதனை வழிமுறையை ஒருவன் செய்துவிட்டு, தன் இருதயத்தில் தேவனை உணராத மனுஷன் "மெய் ஆராதனை அறியவில்லை" என்றே உறுதியாய் கூறமுடியும். தேவனை ஆராதிக்க உந்தும் ஒருவனுடைய ஆவியில், முதலாவது நிலைகொண்டிருக்க வேண்டியது "அளவில்லா வல்லமை கொண்ட தேவன்மீது வைத்திருக்கும் நம்பிக்கையேயாகும்!" இப்படி ஒரு விசாலமான, உறுதியான நம்பிக்கையை தேவன் மீது வைத்திராதவன், அவரை மெய்யாய் ஆராதித்திட முடியாது.*

*'தேவனை தன் ஆவியில் நெருங்கி' அவருடைய மாட்சிமையை கண்டவன், அவருடைய மகத்துவத்தைப் புகழாமல் இருந்திட முடியாது! அவரது மாட்சிமை நிறைந்த ஆவியை நெருங்கிவிட்ட அவன், தேவனால் முற்றிலும் சிறைப்பட்டு, சர்வ வல்ல தேவனுடைய*

*அன்பினால் கவரப்பட்டு,* **தேவனோடு ஒன்றற கலந்து,** *அவருக்கு முன் "அதமானேன்!" என முகம்குப்புற பணிந்து ஆராதிப்பான்!!*

**இந்த அற்புத சமயத்தில்தான், தன் முழுப்பெலத்தையும் கொண்டு "தேவனே நான் உம்மை நேசிக்கிறேன்!" என பரவசமாய் அவரை அன்புகூருவான். அந்த முழுமையான நேசத்தில் தெய்வ பயமும், அதிசயமும், ஏக்கமும், ஆச்சரியமும் கலந்திருக்கும்! சில சமயங்களில், தன் ஆராதனையின் இறுதியில் 'மௌனமே' அவனது பரவச அனுபவமாய் மாறி விடும்!**

*அந்தோ, இன்றைய தனிக்கிறிஸ்தவன் தொடங்கி, சபை மட்டும்.... தேவனை மனம் பொங்க ஆராதிக்கும் நிலையைக் காண்பது அரிதாய் போய்விட்டது! தன்னுடைய 'ஸ்தாபன கட்டுகளில் சிக்கியிருக்கும் தேவனையே' அவன் காண்கிறான்! தான் இட்ட கட்டளைக்கு இணங்கும்* **'சிறிய தேவனே'** *அவனுக்கும், அவன் சபைக்கும் இருக்கிறது! இவர்களின் தேவன் 'மண்ணுக்குரியவராய்' லௌகீக லாப-நஷ்டத்திற்கு உதவும் சிறிய தேவனாய் இவர்களுக்கு காணப்படுகிறார்!*

*அவன் துன்பம் அடையும் போது அவர் உதவிசெய்ய வரவேண்டும்! அவன் தூங்கும்போது அவர் விழித்திருக்க வேண்டும்!* **இந்த ஸ்தாபன கட்டுகளில் சிக்கியிருக்கும் ஆராதனையில், தேவனுக்கு வானுயர்ந்த மதிப்பு ஒன்றும் இருப்பதில்லை!** *ஆனால், பரிசுத்த ஆவியானவர் தேவனை நமக்கு காட்டும்போது "அவர் இருக்கிறவண்ணமாக நாம் கண்டு, ஆச்சரியத்திலும் அதிசயத்திலும் மூழ்கி" உள்ளம் நொறுங்கி நெகிழ்ந்து, தேவனை ஆராதித்திட முடிகிறது!*

*மனந்திரும்பி விசுவாசியாய் மாறிய ஒவ்வொருவனும் 'முதலாவது' தேவனை அன்புகூர்ந்து ஆராதிக்கவும்! 'இரண்டாவதாகவே' அவருக்கு ஊழியஞ் செய்யவும் தேவன் அழைத்திருக்கிறார்! தேவனும், தேவனுக்குரியவைகளும் அவன் உள்ளத்தை பரவசமாய் எப்போதும் பற்றியிருக்கும். இவ்வாறு தன் ஆண்டவரை, மெய்யாகவே ஆராதிப்பவனின் ஊழியத்தில் மாத்திரமே 'நித்தியம்' இடம்பெறும்!*

*தன் தனிப்பட்ட ஜீவியத்தில், கிறிஸ்துவின் மீது சொல்லொண்ணா அன்பினால் பற்றியெறியும் ஒருவன் இருக்கிறானா? எனக்கு அவனை காட்டுங்கள். அந்த பரிசுத்தவானின் வஸ்திரங்கள் கூட, தெய்வ ஆராதனை நறுமணம் மணக்கும்! மெய்யாய் சொல்லுகிறேன் கேளுங்கள்: "வரப்போகும் சர்வ சங்க சபையில், ஆராதனையின் நறுமணம் வீசும் பரிசுத்தவான்கள் மட்டுமே இருப்பார்கள்!".*

*- A.W.டோசர்*

## அவருடைய குமாரனுக்கு ஒப்பாக, சிலுவையை சகிப்பது பாக்கியம்!

*கன்னிமாடத்து சகோதரி, ஜெப வாழ்க்கையைப் பற்றிக்கொண்டு நேர்வழி சென்றதினிமித்தம் 'அந்த பிரசங்கி' என் மீது அதிக கோபம் கொண்டார். இதனிமித்தமாய் என்னை* "**தனிப்பட்ட முறையில் தீமையாய் விமர்சித்து**" *பேசத் தொடங்கினார். அதை நான் அறிந்தாலும், ஒரு பொருட்டாய் எண்ணவில்லை! இச்சமயத்தில், தந்தை லா-கோம்பேயின் தூய வாழ்க்கையினிமித்தம் பொறாமை கொண்ட ஒரு கத்தோலிக்க துறவி, இந்தப் பிரசங்கியை சந்தித்தார். இவர்கள் இருவருமாய் சேர்ந்து, கன்னிமாட இல்லத்திலிருந்து என்னை தள்ளி வைக்க அதிக உக்கிரம் கொண்டார்கள். அவ்வாறு நிகழ்ந்தால், தங்கள் நோக்கத்தின்படி செயல்படலாம் எனவும் விரும்பினார்கள்.*

*அந்த கன்னிமாட இல்லத்தில் தோன்றும் எந்த பிரச்சனைகளிலும், நான் தலையிட விரும்பியதில்லை. அங்குள்ள கன்னியாஸ்திரீகள் விரும்பியபடி அவைகளை தீர்த்துக்கொள்ளவே, நான் விலகி நிற்பதுண்டு! நான் இந்த கன்னிமாடத்தில் பிரவேசித்த ஆரம்ப காலத்திலேயே, எனக்குச் சொந்தமான பல்லாயிரம் ரூபாய்களை கொடுத்திருக்கிறேன். அதை வைத்து நான் எந்த சகாயத்தையும் தேட முயன்றதில்லை. நான் சென்ற தூய வழியை, ஒரு சில பணிப்பெண்கள் அறிந்து, அவர்களும் அதைப் பின்பற்றினார்கள்.*

*இவ்வாறெல்லாம், ஏராளமான சிலுவைகளை நான் சந்திக்க வேண்டும் என்பதை, ஆண்டவர் ஏற்கெனவே எனக்கு உணர்த்தியுள்ளார். அதே நேரத்தில் இயேசு மாதிரியாய் காண்பித்த* "**தனக்கு முன் இருந்த சந்தோஷத்தின் பொருட்டு சிலுவையை சகித்தார்**" *என்ற எபிரெயர்.12:2-ம் வசனம் என்னை கைதூக்கி தாங்குவதாய் இருந்தது. நான் அந்த நாளிலேயே, ஆண்டவருக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து, நீண்ட நேரம் ஜெபத்தில் தரித்திருந்து, அவர் கரத்திலிருந்து வரும் எந்த துன்பங்களையும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ள அர்ப்பணித்தேன்.*

"ஓ என் தேவனே, உம் சொந்த ஒரே மகனையே பலியாகத் தந்தீரல்லவோ! உம்முடைய ஒரே மகனாகிய இயேசுவைத் தவிர, பலியாக தந்திட தகுதியுள்ளவர்கள் வேறு ஒருவருமில்லையே! இன்றும் உம் சொந்த குமாரனுக்குள் இதுபோன்ற தகுதியுடைய இருதயங்களை நீர் ஒருவரே அறிந்திருக்கிறீர்!" என ஜெபித்து கண்ணீரோடு ஒப்படைத்தேன்!

*ஜெபித்து முடித்த அந்த சமயத்தில், தந்தை லா-கோம்பே அவர்கள், மிகப் பெரிய சிலுவையில் அறையப்பட்டதைப்போலவும், அவருக்குப்*

பின்பாக ஆத்திரமுள்ள ஒரு கூட்டத்தார் நிற்பதைப்போலவும், நானோ அந்த காட்சியில் '**பலரின் இழி சொற்களால்**' கண்ணீர் மல்க நின்று கொண்டிருப்பதைப்போலவும் 'ஒரு காட்சி' என் கண்களுக்கு முன்பாக தோன்றி மறைந்தது! உண்மைதான், இந்த காட்சிக்கு ஒப்பாகவே, அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்வுகள் நிரூபணமாய் மாறின.

அந்த கன்னிமாட இல்லத்தின் பொறுப்பிற்கு நான் முன்கூறிய 'பிரசங்கி' நியமணத்திற்கு வந்தார். நான் தங்கியிருந்த அறையில், எனக்கு உதவி செய்யும்படி இரண்டு பணிப்பெண்கள் இருந்தார்கள். இச்சமயத்தில், கன்னிமாட இல்லத்தின் கட்டளைப்படி, ஒரு பணிப்பெண் சமையல் பொறுப்பிற்கும், மற்றொரு பணிப்பெண் வரவேற்பு அறைக்கும் அழைக்கப்பட்டு சென்று விட்டார்கள். அந்த இரண்டு பணிப்பெண்களுக்கும் என்னுடைய சொந்த சேமிப்பிலிருந்தே சம்பள பணம் செலுத்தியிருந்தேன். அந்த ஒரு வருடத்திற்குரிய சம்பளத்தை, முன்கூட்டியே கொடுத்துவிட்டேன்! ஆனால் சில மாதங்களுக்குள்ளாகவே அவர்களை வேறு பணிக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். நானோ, அதைக்குறித்து சஞ்சலமடையவில்லை! 'ஏதாவது உதவிக்கு' நான் பணிபெண்களை அழைத்தாலும், அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆலயத்தின் புனிததுப்புரவு பணிக்கு என்னை பொறுப்பாய் வைத்தார்கள். ஆலயத்தின் மிகப்பெரிய வளாகத்தை சுத்தம் செய்யும் அந்தப் பணியில், ஒரு பணிப்பெண்ணைகூட எனக்கு உதவியாக அனுப்ப மறுத்து விட்டார்கள். **பலமுறை, துடைப்பத்தை கையில் பிடித்தவாறே நான் மயங்கி விழுந்திருக்கிறேன்.** சரீர பெலவீனத்தில், ஆலயத்தின் மூலையில் சுருண்டு படுத்து விடுவேன்!

மேலும், என்அரண்மனை வாசத்தில் நான் ஒருபோதும் துணிகளை துவைத்ததில்லை. இப்போதோ, கன்னிமாடத்திலுள்ள அனைவரின் ஆடைகளையும் நான் மாத்திரமே துவைக்கும்படி கட்டளை பெற்றேன். துவைத்து பழக்கம் இல்லாதபடியால், நான் விரும்பியபடி தூய்மையாய் துவைக்க முடிவதில்லை. என்னிடம் சம்பளம் வாங்கியிருந்த ஒரு பணிப்பெண்ணை உதவிக்கு அழைத்தேன். அப்போது அங்கு விரைந்து வந்த சில கன்னியாஸ்திரீகள் "அவளுக்குரிய வேலையை, அவளே செய்யட்டும்!" எனக்கூறி பணிப்பெண்ணின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றுவிட்டார்கள். அவ்வேளையில் நான் யாதொரு எதிர்ப்பும் தெரிவிக்காமல் அமைதியாய் இருந்தேன். அந்த பணிப்பெண், மீதியான நேரத்தில் என்னிடத்தில் வருவாள். அவளுக்கு "**ஆண்டவரிடம் அன்புகூர்ந்து ஜெபிக்கும் அர்ப்பண ஜெப ஜீவியத்தை**" கற்றுக்கொடுத்தேன். ஜெப ஜீவியத்தில் வளர்ந்த அந்த பணிப்பெண், என் மீது பட்சமான

*நட்பு கொண்டாள். இதை கண்ணுற்ற 'அந்த பிரசங்கி' மிகவும் கோபம் அடைந்தார். இத்தனை தீமைகளுக்கும் நடுவே, அந்தப் பிரசங்கி, தலைமை அலுவலகத்திற்குச் சென்றார். அங்கு சென்று 'இணக்கமான சூழ்நிலைக்கு மாறாக' குழப்பத்தை ஏற்படுத்துவதே அவரது பிரதான நோக்கமாயிருந்தது. அதுமாத்திரமல்லாமல், முதிர்ச்சி அடைந்த பரிசுத்தவானாய் விளங்கிய தந்தை லா-கோம்பே அவர்களுக்கு கேடு விளைவிக்கும் நோக்கத்தோடும் அங்கு சென்றுள்ளார் என கேள்விப்பட்டு, மனம் வருந்தினேன்!*

*- மேடம் குயான்*

---

## "தேவனை சந்திப்பதே" ஜெபத்தின் பிரதானம்!

*ஜெபத்தின் அர்த்தம் என்ன? "தேவனிடத்தில் எதையாவது கேட்பதே ஜெபம்" என்றே திரளான கிறிஸ்தவர்கள் எண்ணுகிறார்கள். இவ்வாறு, நம்முடைய 'ஜெப சேதியை' கேட்டவுடன், தேவன் அங்குமிங்கும் ஓடி காரியங்களை நிறைவேற்றுவார் என நாம் எண்ணுவது சரிதானா? ஓர் மிகப்பெரிய பணக்காரனின் வீட்டு வாசலை ஒரு பிச்சைக்காரன் தட்டிக் கேட்கும் மதிப்பைவிட, தேவனிடத்தில் கேட்டு ஜெபிப்பது அதிக கௌரவமானது அல்லவா! நம்முடைய விருப்பத்தை தேவனிடத்தில் தெரியப்படுத்துவதுதான் ஜெபம். ஆகிலும், ஓர் மெய்யான ஜெபத்தில் தேவனையே தேடுவதும், அவருக்குள் நம் தேவைகளையெல்லாம் பெற்றுக்கொள்வதுமே, மாசற்ற ஜெபமாய் விளங்குகிறது.* **நம்முடைய ஆத்துமாவை தேவனை நோக்கி திருப்புவதே ஜெபத்தின் எளிய விளக்கமாகும்.** *இதை தாவீது விவரித்து "கர்த்தாவே உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்" என மிக எளிதாய் கூறிவிட்டார் (சங்.25:1). இதைவிட ஜெபத்திற்கு ஓர் அழகான விளக்கம் வேறு எதுவும் இருக்காது. தேவன் நம்முடைய ஆத்துமாவை திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்கள் "பரிசுத்த அலங்காரம் தங்கள் ஆத்துமாவிற்கு வேண்டும்" என்ற விருப்பத்தையும் சேர்த்தே வைத்திருப்பார்கள்.*

***இவ்வாறு, தேவனிடத்தில் நம்முடைய ஆத்துமாவை ஜெபத்தில் உயர்த்தும்போது, தேவன் நமக்குள்ளும், நமக்கும் என்ன செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்வதற்குரிய சந்தர்ப்பத்தை அவருக்கு நாம் வழங்குகிறோம்! நம் முழுமையையும் தேவனுடைய பார்வைக்கே அர்ப்பணித்து விடுகிறோம்!***

*தேவன் எப்போதுமே, நம் பட்சத்தில்தான் நிற்பார். ஆனால், நாம் எப்போதும் தேவனுடைய பட்சமாய் நிற்பதில்லை! மனுஷனுடைய*

ஒவ்வொரு ஜெபமும், தேவனுக்கு நாம் தரும் சந்தர்ப்பமேயாகும்! ஓர் பக்தன் தன் கவியில் கூறும்போது: "சொல்லி ஜெபித்தாலோ, சொல்லாமல் வார்த்தைகளை மனதில் வைத்திருந்தாலோ, ஜெபமானது நம் ஆத்துமாவின் உண்மையான விருப்பமாய் இருக்க வேண்டும். அந்த விருப்பம் மறைந்து நிற்கும் அக்கினியை நெஞ்சத்தில் கொண்டு வந்து 'தேவனுக்கு முன்பாக' அதிரச் செய்வதாய் இருக்க வேண்டும்" என எழுதினார். ஆகவே, ஓர் மெய்யான ஜெப நேரம் "பரலோகமும் பூலோகமும் ஒன்றையொன்று சந்தித்து முத்தம் செய்வதாயிருக்க வேண்டும்!".

இப்போது நாம் தெளிவாய் அறிந்து கொண்டபடி "நமக்கு தேவன் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை, தேவனுக்குப் பின்னால் ஓடிச் சென்று கேட்பது ஜெபம் அல்ல". ஏதோ, நம்முடைய விருப்பத்தைக் குறித்து அக்கறையில்லாத தேவனின் மனதை, நம் திசை நோக்கி வளைத்திட, முயற்சிப்பது ஜெபமாகாது! நம்மீது தேவன் கொண்டி ருக்கிற நோக்கத்தை, நம் ஜெபத்தின் மூலமாய் மாற்றிட இயலாது.

> **"அக்கறையில்லாத தேவனை ஜெபத்தின் மூலமாய் நம்மீது அக்கறை கொள்ளச் செய்வதுபோல் அல்லாமல், அவருடைய தலைசிறந்த விருப்பத்தை, நாம் தேடி பற்றிக்கொள்ள நாடுவதே ஜெபமாகும்!"**

ஏனெனில், தேவன் வைத்திருக்கும் நோக்கமெல்லாம் "நம்மைக்குறித்த மிகச் சிறந்த நன்மையாகவே" எப்போதும் இருக்கிறது. 'அறியாமையில்' நாம் ஜெபித்த ஜெபம் யாதொன்றும், தேவன் நம்மீது வைத்திருக்கும் நோக்கத்தை திசை திருப்பாது! ஆகிலும், நாம் அறியாத சில தீமையான காரியங்களை நாம் தொடர்ச்சியாய் கேட்டதினிமித்தம், தேவன் விலகி நின்று, அதை அடைந்திடச் செய்வார்! அதன் விளைவாகவே நாம் துன்பங்கள் பல அனுபவிக்க நேருகிறது. இதை சங்கீதக்காரன் கூறும்போது "அவர்கள் கேட்டதை அவர்களுக்கு கொடுத்தார். அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்" என கூறினார் (சங்.106:15). ஆம், 'ஆத்துமாவுக்கு ஏற்படும் இளைப்பை' தங்களுக்குத் தாங்களே இவர்கள் வருஷித்துக் கொண்டார்கள். இவ்வாறு "பதிலளிக்கப்பட்ட ஜெபம், இவர்களுக்கு சாபமாய் மாறி விட்டது".

ஆத்திர அவசரத்திற்காக ஜெபிக்கும் சிந்தையே அநேகருடைய மனதை ஆட்கொண்டிருக்கிறது. தங்களை பயமுறுத்தும் அபாயம், சம்பவித்த சில நோய்கள், திடீரென்று ஏற்பட்ட கஷ்டங்கள்.... இவைகளுக்கே இவர்கள் ஓடியாடி ஜெபிக்கிறார்கள். ஒரு சமயம், தேவன் இல்லையெனக் கூறும் ஒரு நாத்திகன், அவன் வேலை செய்து கொண்டிருந்த நிலக்கரி சுரங்கம் பூமியதிர்ச்சியில் குலுங்கியவுடன்

"ஓ தேவனே...." என ஜெபிக்கத் துவங்கினான். இதை சற்றுத் தள்ளி நின்று, பார்த்துக் கொண்டிருந்த ஒரு உத்தம கிறிஸ்தவன் "சரிதான், இந்த கரும்புகை நிலக்கரி இந்த மனிதனை 'இன்று' ஜெபிக்கத் தூண்டியுள்ளது" என கூறினார்!

ஆகவே, எதையாகிலும் ஒன்றை தேவன் எனக்குச் செய்ய வேண்டும் என கேட்பதைவிட 'அதிக மதிப்புள்ளதாய்' ஜெபம் இருக்கிறது!

**தேவனையே முற்றிலும் சார்ந்து கொள்வதுதான் ஜெபத்தின் அடிப்படை நோக்கமாய் இருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டே தேவனோடு நாம் ஐக்கியம் கொள்கிறோம்! உறவு கொள்கிறோம்! அவரோடு பேசுகிறோம்!**

நாம் ஒருவரோடொருவர் பேசும்போதுதான், ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும் செய்கிறோம். இவ்வாறாகவே, நாம் தேவனிடம் பேசிப்பழகி அவரை நெருங்கி அறிந்து கொள்கிறோம். தீமையிலிருந்து இரட்சிக்கப்படுவதே நம் ஜெபத்தின் பிரதான நோக்கமல்ல! நாம் மிகவும் விரும்பினதை பெற்றுக்கொண்டதும் பிரதானமல்ல! அந்த ஜெபத்தில், நாம் தேவனை அறிந்து கொண்டதே பிரதானமாகும். இதை இயேசு கூறும்போது "ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என தெளிவாக கூறினார் (யோவான் 17:3). **ஆம், ஜெபமே நாம் தேவனை அதிகமாய் கண்டுபிடிக்க உதவுகிறது.** அதுவே, நம் ஆத்துமாவின் விலையுயர்ந்த கண்டுபிடிப்பாய் இருக்கிறது! யோபுவின் மிகப்பெரிய அங்கலாய்ப்பாய் இருந்ததெல்லாம் "நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும். அப்போது நான் அவர் ஆசனத்திற்கு முன்பாக வந்து சேர்வேன்" என்ற வாஞ்சையேயாகும் (யோபு 23:3). இதுவே நம் யாவருடைய ஜெபத்தின் அங்கலாய்ப்பாய் இருப்பதாக!

- ஜெபதூப ரஞ்சினி

---

## நித்தியம், பூமியிலிருந்து துவங்குகிறது!

இந்த பூமியில் யாதொரு பொருளைக் குறித்தும் ஓர் நீடித்த திருப்தியை ஒருவரும் பெற்று வாழ்ந்திட முடியாது! அதுபோலவே, யாதொரு சூழ்நிலையும் ஒரே விதமாய் எப்பொழுதும் நிலைத்திருப்பதில்லை. அதுஏனென்றால், **'இந்த உலகத்தின் மாயை'** நம் ஆத்துமாவை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது என்ற உண்மையேயாகும். ஆத்தும தாகத்தை, உலக மாயை கொண்டு தன்னை திருப்திப்படுத்த முயற்சிக்கிறவன் இவ்வாறாகவே தோல்வி அடைகிறான்! முடிவில் இந்த உலகத்தில் மகிழ்ச்சியை இழந்த

*அவன், மரணத்திற்குப் பிறகு, பரலோகம் சென்று மகிழ்ச்சியாய் இருக்கலாம் என்ற நப்பாசையை மனதில் வைத்து வாழ்கிறான்! ஆனால் உண்மை என்னவென்றால், இந்த பூமியிலிருந்து தான் பரலோகம் துவங்குகிறது என்பதை இவர்கள் உணரவில்லை! பழகாத வேறொரு இடத்திற்குச் சென்று, இவர்களால் எப்படி மகிழ்ச்சியாய் வாழ முடியும்? கிறிஸ்தவர்கள் என்ற பெயரில், சொற்பமான இந்த பூமிக்குரிய வாழ்க்கையில் கிறிஸ்துவோடு இணைந்து வாழத் தெரியாதவர்கள், நித்தியத்தில் எப்படி சேர்ந்து வாழ்வார்கள்?*

*ஒன்றை நாம் அறிந்திருக்க வேண்டும்.* **பரலோகமும் நரகமும் ஒன்றுக்கொன்று இரண்டு திசைக்குரியதாகும்.** *இந்த இரண்டுமே ஆத்துமத்திற்குரியதுதான்! இந்த இரண்டு அனுபவங்கள் தோன்றும் இடமும் நம் ஆத்துமாதான்! பழத்தின் சுவையான இனிப்பை ஒருவன் அனுபவிக்கிறான். மற்றொருவன் தன் சரீரத்தில் ஒரு வலியை உணர்ந்து அனுபவிக்கிறான். தனித்தனியாக இந்த இரண்டு அனுபவமும் எவ்வளவு உண்மையோ, அதே அளவு உண்மையாய் தன் ஆத்துமாவில் மோட்சம் அல்லது நரகம் என்ற தனித்தனியான உணர்வுகள், மானிடர்களாகிய நமக்கும் உண்டு! பாவத்தின் பலன் அவனுடைய ஆத்துமாவில் வலியைத் தரும்! நன்மையான நற்குணங்கள் ஒருவனின் ஆத்துமாவில் மகிழ்ச்சியைத் தரும்! இதுவே, எல்லோருடைய ஆவிக்குரிய நிலையிலும் நடைபெறுகின்ற மெய்யான அனுபவமாய் இருக்கிறது. ஒருவன் அதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அது அப்படித்தான்! இந்த மெய்யான உணர்வை வைத்து, ஒருவனிடத்தில் பரலோகம் துவங்கி இருக்கிறதா? அல்லது நரகம் துவங்கியிருக்கிறதா? என்பதை இந்த பூமியிலேயே அவன் அறிந்துகொள்ள முடியும்!*

> **பரலோகமும் நரகமும் நித்தியத்திற்குரிய முடிவுதான் என்பதை நாம் யாவரும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மரணத்திற்குப் பிறகு வரும் ஆத்தும உலகத்தின் பிரவேசம் 'இந்த பூமியில் துவங்குகிறது!' என்பதைக் கூட நாம் உணராதிருப்பது துயரமல்லவா?**

*காரியம் இப்படித்தான் நடக்கும் என அறிந்த ஒருவன், நித்திய நரகத்தை எப்படி இந்த பூமியில் தெரிந்து கொள்வான்? என நீங்கள் கேட்கலாம். ஆனால், நம்மை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தா, நம்முடைய இருதயம் 'ஜீவ ஆவியை' ஏற்றுக்கொண்டு சிருஷ்டிகரை அன்புகூர்வதற்கே சிருஷ்டித்தார்! அப்படியிருந்தும், இந்த உலக மாயையின் அன்பில் சிக்குண்டவனின் இருதயம், ஆவிக்குரிய சிநேகத்திற்கு மனம் திரும்பி வர மறுக்கின்றது. எஜமானாகிய தேவனிடத்தில் ஒரு மனிதனுடைய இருதயம் திரும்பிவிட்டால்,*

*உலக அன்பின் மாயை, தானாகவே கழுவப்பட்டு விடும். இந்த நல்ல வேளையில்தான், பரலோகத்தின் நித்திய மதிப்பும் சமாதானமும் அவனுடைய ஆவியில் நித்தியமாய் தங்கும்!*

*இந்த பூமிக்கு நம்மை இரட்சிக்க வந்த ஆண்டவர், சிலுவையில் தொங்கியபோது, அவரைப்போலவே இரண்டு கள்வர்கள் வலது இடது பக்கம் தொங்கினார்கள். தோற்றத்தில், மூன்று பேரின் கதியும் ஒரே மாதிரியாகவே தோன்றுகிறது. ஆனால், அந்த மூன்று பேருக்குள்ளும் எவ்வளவு பெரிய வித்தியாசங்கள் உள்ளன. ஒருவன், தன்னுடைய துன்பத்தில் இரட்சகரைத் திட்டி அவமரியாதை செய்கிறான்! மற்றொருவனோ, பரிசுத்தரான ஆண்டவருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு மனவேதனையடைகிறான்! இந்த சரியான நேரத்தில், தெய்வ அன்பு அவனுடைய இருதயத்தை திறந்து, இரட்சகர் அவன் இருதயத்தில் பிரவேசிக்க வழிசெய்தது. அந்த வேளையில்,* **அன்றைக்கே அவன் பரதீசியில் பிரவேசித்து விட்டான்** *என ஆண்டவர் அறிவித்தார். நித்திய பரமதேசம் மரணத்திற்குப் பிறகு அல்ல, அது இப்போதே ஒரு மானிட இருதயத்திற்குள் துவங்கி விட்டது!*

**மரியாளின் கர்ப்பத்திற்குள், தேவன் மனு உருவெடுத்தார் என மேன்மை பாராட்டுகிறவர்கள் அனேகர் உண்டு. இதற்கொப்பாகவே, எந்த ஒரு மானிடனும் தன் இருதயத்தில் இரட்சகராகிய குருவை அழைத்தால், அவன் இருதயத்தில் பிரவேசித்து, பரலோக ஜீவியத்தை 'இன்றே' அவர் துவங்கி விட மாட்டாரோ?**

*ஒரு எளிமையான தரிசனத்தில், ஓர் உண்மையை நான் அறிந்து தெளிவு பெற்றேன்: அது என்னவெனில், துன்மார்க்கமாய் தன் ஜீவியத்தில் வாழ்ந்த ஒருவன் மரித்தவுடன், ஆவியின் உலகத்தில் பிரவேசித்தான். அவனை பரலோகத்திற்கு அழைத்து வர முடியுமோ என எண்ணி, தேவ தூதர்களும் வெண்ணிற ஆடை உடுத்தின பரிசுத்தவான்களும் முயற்சித்தார்கள். அந்த மனுஷனோ, அவர்களை நிந்தித்து வசைமொழி பேசி "உங்கள் தேவன் அநீதியுள்ளவர்! தனக்கு முகஸ்துதி போற்றும் அடிமைகளுக்காகவே பரலோகத்தை ஆயத்தம் செய்து, எங்களைப் போன்றவர்களை நரகத்தில் தள்ளுகிறார்! இப்படிப்பட்டவரைப்போற்றி 'அன்புள்ளவர்' என நீங்கள் புகழுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று கூறினான். அந்த நேரத்தில், "இந்த மனுஷன் பரலோகம் பிரவேசிக்க தேவன் அனுமதித்து விட்டார்!" என, ஒரு பிரதான தூதனின் சத்தம் கேட்டது. உடனே அந்த மனிதன் துள்ளிக் குதித்து, பரலோக வாசலை நெருங்கினான். அங்கு பிரமாண்டமான அழகு மாளிகையும், மகிமை நிறைந்த*

*பரிசுத்தவான்களையும் கண்டு சற்று பின்வாங்கினான். தூதர்கள் அவனைப் பார்த்து, சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இரட்சகரை நோக்கிச் செல்லும்படி அவனை உற்சாகப்படுத்தினார்கள். நீதியின் சூரியனாய் பிரகாசித்த ஒளி வெள்ளம், அவனுடைய தீட்டுப்பட்ட அழுக்கான இருதயத்தின் கறைகளை வெளிப்படுத்திக் காண்பித்தது. பேரொளியைக் காண இயலாத அவன், அந்த இடத்தைவிட்டு விரைவாய் ஓடிச்சென்று, பாதாளத்திற்குள் பாய்ந்து மறைந்து விட்டான்!*

*அப்போது, இரட்சகப்பெருமான் உரைத்த சத்தத்தைக் கேட்டேன்: "என் அன்பு பிள்ளைகளே, என்னுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க ஒருவனையும் நான் தடை செய்வதில்லை. இந்த மனிதனைப் பாருங்கள், அவன் உள்ளே பிரவேசிப்பதற்கு யாரும் தடை செய்யவில்லை. அதுபோலவே, இந்த இடத்தை விட்டுப்போய்விடுவதற்கு யாரும் அவனிடத்தில் கூறவில்லை. ஒருவன் தன் இருதயத்தில் அல்லது* **அவனுடைய ஆவியில் மறுபடியும் பிறவாவிட்டால்,** *அவனால் தேவனுடைய ராஜ்ஜியத்தை காண இயலாது!" (யோவான் 3:3) என எதிரொலித்த சத்தத்தைக் கேட்டு, பக்தியுடன் முழங்கால்படியிட்டு அவரைத் தொழுது கொண்டேன்!*

*- சாது சுந்தர்சிங்*

---

## துன்பத்தில், தேவன் தந்திடும் ஆசீர்வாதங்கள்!

**ஆ***ண்டவரை நேசிக்கும் பக்தர்களை அண்டிவரும் துன்பம் எதுவாயிருந்தாலும், அது அனைத்தும் பல்வேறு நன்மைகளாகவே நிறைவேறி முடிகிறது. யோபுவின் நண்பர்களில் எலிகூ என்பவர் ஓர் பக்தியுள்ள நண்பராய் விளங்கினார். தன் பாடுகளில் அவர் அடைந்த அனுபவத்தை, யோபுவுக்கு கூறும்போது "என்னை உண்டாக்கினவரும்,* **இரவிலும் கீதம் பாட** *அருள் செய்கிறவருமாகிய என் தேவன்" (யோபு.35:11) என யோபுவுக்கு ஆறுதலாய் கூறினார். மெய்யாகவே துன்பத்தில் பிரவேசிக்கும் 'தேவனுடைய சமூகம்' அவரது பக்தர்களை கீதம் பாடும்படியே செய்திருக்கிறது! எத்தனை துன்பம் இருந்தாலும், தேவ பிரச்சனத்தில் பாடிடும் பாடல், அவர்களுக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுத்திருக்கிறது. 'காரிருள்' போன்ற சூழ்நிலையிலும் கீதம் பாடி ஆறுதல் அடைந்திருக்கிறார்கள்!*

*இங்கிலாந்தில், யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், மேல் தளத்திற்கு கீழாக கட்டி வைத்திருந்த சுரங்க அறைக்குள், அது இருட்டாயிருந்தாலும், பிள்ளைகள் பத்திரமாய் இருப்பதை அறிந்த ஒரு தகப்பன், தேவனை துதித்தார். மேலும் அவர் கூறும்போது "மேல்*

தளம் உடைந்து போனால் என்ன? எங்களைப் பாதுகாத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!'' என விசுவாச அறிக்கை செய்தார்.

**மற்றொரு சமயம், கர்த்தருக்கு ஊழியம் செய்த தன் கணவரின் அடக்க ஆராதனை முடிந்தவுடன், விதவையாகிவிட்ட அந்த இளம் மனைவி, அன்று மதியமே சண்டே - ஸ்கூல் நடத்துவதற்குச் சென்றுவிட்டார்கள்! துக்கத்திற்குப் பின், நம்பிக்கையற்ற மாந்தர்களைப் போல் இந்த ஊழிய சகோதரி இருக்கவில்லை!**

அவள்துக்கம்அடைந்தாலும்அது'விசுவாச'துக்கமாகவேயிருந்தது. தேவன் நல்லவர் என்பதிலும், ஞானமுள்ளவர் என்பதிலும் அசைக்கப்பட முடியாத விசுவாசம் கொண்டவளாயிருந்தாள். "என் பரம பிதா, என் ஜீவியத்தில் ஒருபோதும் தவறு செய்ததில்லை!'' என்பதே அவளுடைய விசுவாச அறிக்கையாயிருந்தது. இன்னும் அதிகமாய் "என்னை சந்தித்த துன்பங்கள் யாவும் என்னை மறுரூபப்படுத்தி இயேசுவைப்போல் மாற்றியது!'' எனவும் கெம்பீரித்தாள் அந்த ஊழிய சகோதரி.

யாக்கோபு 1:2-4 வசனங்கள் RSV மொழியெர்ப்பு கீழ்கண்டவாறு கூறுகிறது : "என் சகோதரர்களே, பல்வேறுவிதமான சோதனைக்குள் நீங்கள் கடந்து வரும்போது, அது ஒவ்வொன்றையும் சந்தோஷமான **கூட்டல் கணக்காய்** எண்ணுங்கள்! உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டபடியால், **நிலைத்திருக்கும உறுதி தன்மையை** உங்களுக்கு வழங்கியிருக்கிறது! இவ்வாறு, உங்கள் ஜீவியத்தில் அடைந்திடும் இந்த உறுதி தன்மை கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து, முழு வளர்ச்சி அடைந்துவிட்டால், நீங்கள் பூரணம் அடைவீர்கள். பின்பு, ஒன்றிலும் நீங்கள் குறைவுப்பட மாட்டீர்கள்!'' என்றே வாசிக்கிறோம்.

தேவபக்தியில் முதிர்ச்சி பெற்ற அநேக பரிசுத்தவான்களை நான் அறிவேன். அவர்களில் சிலர் ஸ்திரீகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்வில் சந்தித்த சில நிகழ்ச்சிகளால், சரீர பெலனை இழந்திருக்கிறார்கள். அச்சமயங்களில் "நீண்ட கால அந்த துன்பங்களை சகித்துக் கொள்ளும்படி கர்த்தர் கூறியதினிமித்தம்'' முக மலர்ச்சியோடு சகித்து வாழ்ந்தார்கள். அவர்களைச் சந்தித்த ஒவ்வொருவரையும், **தங்கள் 'விசுவாச புன்னகையால்'** அளவில்லாது ஆசீர்வதித்திருக்கிறார்கள். அதுபோன்ற சூழ்நிலைகளில், கசப்பும் சோர்வும் கொண்டவர்களே அநேகர் இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் கிறிஸ்துவை அறிந்திருந்தபடியால், ஒவ்வொரு நாளும் **அவருடைய பேரானந்த சமூகத்திற்குள் பிரவேசித்து** தேவனோடு, இசைந்து நடந்தார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தபடியால், தங்களைக் காண வந்த ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவைப் பிரதிபலித்தார்கள்!

*கிறிஸ்தவ விசுவாச அனுபவங்களில், என் உள்ளத்தை தொட்ட மேன்மையான அனுபவம் ஒன்று உண்டு: மருத்துவமனைக்கோ அல்லது வியாதிப்பட்ட ஒருவருடைய வீட்டிற்கோ நான் சென்று அவர்களை உற்சாகப்படுத்த முயற்சித்திருக்கிறேன். ஆனால், அவர்களோடு பேசி வந்த அந்த சில நிமிடங்கள் "நான் அவர்களை ஆறுதல்படுத்தினேன் என கூறுவதைவிட, அவர்களே எனக்கு ஆறுதலாயிருந்தார்கள்! நான் அவர்களை உற்சாகப்படுத்தினேன் என கூறுவதைவிட, அவர்களே எனக்கு உற்சாகமாயிருந்தார்கள்! நான் அவர்களுக்கு உதவினேன் என்பதைவிட, அவர்களே எனக்கு உதவினார்கள்!" அதுஏனென்றால், அவர்கள் கடந்து வந்த பாடுகளைக்கொண்டு, தேவன் அவர்களை கிறிஸ்துவைப்போலவே மாற்றி, பிரகாசிக்கச் செய்து விட்டார்!*

'அணுவின்' (THE ATOM) வல்லமையை கண்டுபிடிப்பதற்கு முன்பாக, அதை 'சிதைப்பதற்குரிய' வழியை விஞ்ஞானம் கண்டுபிடிக்க அவசியமாயிருந்தது. அளவிலடங்காத அணுவின் வல்லமை **'அது சிதைக்கப்படுவதில்'** அடங்கியிருக்கிறது! சிறந்த ஊழியரான எட்வர்டு ஐட்சன் கூறுகையில் "துன்பமும் வெற்றியும் இணைந்தே செல்லுகிறது. நீங்கள் பாடுகளுக்குள் பிரவேசிக்காமலே வெற்றி பெற்றிருந்தால், அதற்கு ஒரே காரணம் உங்களுக்கு முன்னோடியாய் சென்றவர்கள் அந்தப் பாடுகளை கடந்து சென்றதை நீங்கள் கண்டதால் ஏற்பட்ட பலனேயாகும்! அதுபோலவே, துன்பங்களில் நீங்கள் வெற்றி காணாதிருந்தால், அதற்கு ஒரே காரணம், உங்களைப் பின்தொடர்பவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதேயாகும்!" இவ்வாறாக, பல்வேறு பாடுகள் வழங்கிடும் நிச்சயமான வெற்றி, உங்கள் யாவருக்கும் விளங்குவதாக! உங்களைச் சுற்றியுள்ள அனைவரையும் ஆசீர்வதிப்பதாக!

*- பண்டிதர் பில்லிகிரஹாம் USA*

---

## இயேசு சந்தித்த 'அநியாய விசாரணை!'

நியாய விசாரணைசெய்யும் யூத அதிகாரிகள் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் பலவுண்டு. அவற்றை முன்கூட்டியே கவனமாய் கடைப்பிடிக்க வேண்டும். ஒருவனுடைய குற்றத்தை நிரூபிக்கிறவரையில் அவனைக் குற்றமற்றவனாகவே எண்ண வேண்டும்!

**நியாயாதிபதியானவன், கைதியின் உயிரைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டுமேயன்றி, அவனைக் கொலை செய்யும்படி தீர்மானிக்கக்கூடாது. கைதியில்லாத சமயத்தில், எந்த விசாரணையும் நடத்தவுங்கூடாது!**

*கைதி விசாரணை கோர்ட்டில் நிற்கும்போது, அவனுக்கு விரோதமாய் சாட்சிசொல்ல வந்திருப்பவர்களை நியாயாதிபதி பார்த்து: "மானிட ஜீவன் அருமையானதென்றும், உண்மையை மறைப்பதும், பொய்யை உரைப்பதும் பாதகமென்றும், குற்றமற்றவனின் இரத்தப்பழி சாட்சிகள் பேரிலும் அவர்கள் சந்ததியின்பேரிலும் சுமருமென்றும் சொல்லி, அவர்களை எச்சரித்து அவர்களிடத்தில் சத்தியம் வாங்கிக்கொள்ளவேண்டும". கைதியின் நியாயத்தை எடுத்துப்பேச நியாயவாதி ஒருவனை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட பரிந்துரையாளன் இல்லாமல் விசாரணை நடத்தக்கூடாது. கைதிக்கு அனுகூலமான வாக்குமூலத்தை நியாயாதிபதி தள்ளாமல் அங்கீகரிக்கவேண்டும். கைதிக்கு அனுகூலமான காரியங்களைச் சொன்னவன் பிந்தி அவனுக்கு விரோதமாகப் பேசக்கூடாது!*

கைதி குற்றவாளியல்லவென்றால், விசாரிக்கும் நாளிலேதானே விடுதலை கூறிவிடலாம். அவன் மரண தண்டனைக்குரியவனானால் ஒருநாள் தாமதித்து, மறுநாளிலேதான் தீர்ப்பு சொல்லவேண்டும். ஆகையால், ஓய்வுநாளுக்காவது பண்டிகைக்கு முந்தின தினத்திலாவது விசாரணை வைத்துக்கொள்ளக்கூடாது. சூரியன் அஸ்தமித்தபின் விசாரணை நடத்தக்கூடாது. கைதி தன்னை குற்றமற்றவன் என்று சொன்னதினிமித்தம் விடுதலை செய்யவுங்கூடாது! தான் குற்றவாளி யென்று ஒத்துக்கொண்டதினிமித்தம் ஆக்கினை செய்யவுங்கூடாது! தீரவிசாரித்ததின் பின்பே தீர்ப்பு கூற வேண்டும். நியாயவிசாரணை இவ்வளவு பயபக்தியுடன் நடத்தப்படவேண்டியதால், மரணதண்டனை விதிக்கும் நியாயாதிபதிகள் முந்தின நாள் முழுவதும் உபவாசிக்க வேண்டும். மரண தண்டனை கூறின அதேநாளில், கொலை தண்டனை நிறைவேற்றப்படக்கூடாது!

தேவனுடைய ஜனங்களாகிய யூதர்களின் நியாயவிதிகள் எவ்வளவு அருமையானவை! ஆங்கிலேயே அரசாட்சியின் மேன்மையும் பலமும் இவைகளல்லவா?

**தேவனைவிட்டு விலகிப்போன மூப்பர்களும், வேதபாரர்களும், பிரதான ஆசாரியர்களும், நியாயவிதிகளைக் கைக்கொண்டு நடந்தார்களென்று சொல்ல ஏதுவில்லை!**

ஆண்டவரை அவர்கள் எவ்வளவு அநியாயமாய் நடத்தினார்களென் பதை தேவன் தன் வேதத்தில் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் எழுதி வைத்திட்டார்! எல்லாவற்றிற்கும் மேலாய் "அவரை உயிரோடு எழுப்பி" அவர்மீது பாய்ந்த அநியாய விசாரணையை, பரமபிதா பொய்யாக்கினார்!

*- பரமானந்தம் ஐயர்*

## இயேசு மலரச் செய்த, புதிய உபதேசம்!

இயேசு தன் ஊழிய ஆரம்பமாய் "பரிசுத்த ஆவியினால்" நிரப்பப்பட்டு, நம்மைப்போல் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்ட பின்பே, தன் பிதாவின் அங்கீகாரத்தையும் பெற்றார்! "இதோ, என் நேச குமாரன் இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்!" என்பதே அந்த ஒப்பற்ற அங்கீகாரம்! (மாற்கு 1:10,11). பின்பு அவர், முதலாவதாய் சீமோன், அவனுடைய சகோதரர் அந்திரேயா, செபதேயுவின் குமாரர்கள் யாக்கோபு அவன் சகோதரன் யோவான்" ஆகிய நான்கு சீஷர்களைத் தெரிந்து கொண்டு, ஆலயத்திற்குள் சென்று போதித்தார்! அதுவும், வேதபாரகர்களைப்போல் அல்லாமல், அதாவது வெறும் வேத வாக்கிய விளக்கங்களைப் பேசாமல், வாழ்ந்து நிரூபித்த 'அதிகாரத்தோடு' அவர் போதித்தார்! இந்த சமயத்தில்தான் ஓர் 'புதுமை' நடந்தது!

ஆம், ஆலயத்திலிருந்த ஒருவனிடத்தில் வாசமாயிருந்த அசுத்த ஆவி உரத்த சத்தமாய் ".... நீர் யாரென்று எனக்குத் தெரியும்! நீர் தேவனுடைய பரிசுத்தர்!" என பணிவோடு வாழ்த்துரை புகழாரம் சூட்டினான்!

*இவ்வித புகழாரம் சூட்டப்பட்ட சமயங்களிளெல்லாம் "எத்தனையோ ஆவிக்குரிய பலவான்கள்" அந்த புகழாரத்தை மகிழ்வுடன் ஏற்று, பெருமையில் வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள்! (மாற்கு 1:21-25). ஆனால் இயேசுவோ 'ஓர் புதுமை' செய்தார்! அவர் அந்த புகழாரத்தை மறுத்து, அவனை அதட்டியது மாத்திரமல்லாமல் "அமைதலாயிரு!" எனவும் கட்டளையிட்டு, அந்த அசுத்தாவியை துரத்தி விரட்டியடித்தார்!*

**இதையெல்லாம், சூழநின்று கனித்துக்கொண்டிருந்த ஆலய மக்கள் "ஆ இது என்ன, புது உபதேசம்!" என்றே வியந்தார்கள் (மாற்கு.1:22-27). இயேசு, அசுத்த ஆவியை விரட்டியதைவிட, அவர்களின் மனதை கொள்ளை கொண்ட அந்த புது உபதேசம் என்ன? :**

ஆம் உலக மாந்தர்கள், பிரசங்கிகள், தங்களுக்கு வரும் "புகழ் மாலையை" ஏற்றுக்கொண்டதை ஆலய மக்கள் பார்த்திருக்கிறார்கள்! ஆனால், இவரோ, தன்னை அண்டிவந்த புகழ்ச்சியை மறுத்தது மாத்திரமல்லாமல், புகழ்ச்சியை தொடர்ந்து பேச அனுமதியாமல் அதட்டி நிறுத்திவிட்டார்! இந்த 'புதிய உபதேசம்' நம் உள்ளத்தை கொள்ளை கொள்வதாக! மனுஷரால் வழங்கப்படும் எந்தப் புகழ்ச்சியும் வீண் என்பதையும், **தேவனால் புகழப்படுவதே உத்தமம்** என வாழும் யாவரும் "இந்த புதிய உபதேசத்தால்" ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (2கொரி.10:18), ஆமென்.

*- T.ரத்தினகுமார்*

முடிவு வரை 'இயேசுவின் அடிமையாய்' வாழ்ந்த

# E.ஸ்டான்லி ஜோன்ஸ்



அமெரிக்க தேசத்திலுள்ள 'மேரிலேண்டில்' பிறந்தவர் ஸ்டான்லி ஜோன்ஸ். சட்டகல்லூரியில் பயின்றபோது அங்குள்ள கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தில் 17-ம் வயதில் சேர்ந்தார். "தன்னார்வ கிறிஸ்தவ பணி மாணவர்கள்" என அழைக்கப்பட்ட மாணவ குழுவோடு இணைந்து சுவிசேஷ பணிகள் செய்தார். கர்த்தருக்குத் தன்னை முழு நேரமாக அர்ப்பணித்து ஆப்பிரிக்காவில் பணியாற்றும்படி அங்கு சென்று மிஷனெரி டேவிட் லிவிங்ஸ்டனை சந்தித்தார். அவரால் அறிவுறுத்தப்பட்டு, சுவிசேஷத்தில் பின்தங்கிய இந்திய தேசத்திற்குச் செல்ல ஊக்குவிக்கப்பட்டார். அவ்வாறே, திருமணத்திற்குப் பிறகு இந்தியாவின் லக்னோ (Lucknow) தலை நகரத்திற்கு, மெத்தடிஸ்ட் சபை போதகராக ஊழியம் செய்தார்.

இந்திய மக்களின் கலாச்சாரத்தின்படியே உடை அணிந்து, மக்களோடு மக்களாக தரையில் அமர்ந்து கிறிஸ்தவ ஏழை எளிய மக்களுக்கு போதக ஊழியம் செய்தார். உத்திரப்பிரதேசத்திலுள்ள *சித்தாப்பூர்* என்ற அந்த இடத்தைவிட்டு சிலகாலம் தன் சொந்த நாட்டிற்கு திரும்பிச் சென்ற அவர், அநேக பாடுகளினிமித்தம் 'மனநோயாளியாய்' மாறினார். வெகு சீக்கிரத்தில் சுகம் பெற்ற அவர், இந்தியா திரும்பி வந்து 1930-ம் ஆண்டு இமாலயா மலைப்பகுதியில் ஒரு கிறிஸ்தவ ஆசிரமத்தை துவக்கினார். இவ்வாறு சுமார் 24 ஆசிரமங்களை இந்தியாவில் நிறுவி கிறிஸ்துவை தீவிரமாய் அறிவித்தார். அவர் கற்றுத் தந்த ஆசிரம ஒழுங்கு சிறப்பானது. அதில் ஜாதி இன வேறுபாடு ஆசிரமத்தில் இருக்கக்கூடாது! அதிகாலை 5.30 மணிக்கு ஜெப தியானத்தில் அமர வேண்டும்! வாரத்தில் ஒருநாள் 'மௌனமாய் இருந்து' தேவனிடம் தன்னை ஆராய்ந்து பரிசுத்த வாழ்க்கையில் வளர வேண்டும்! என நேர்த்தியாய் நடத்தி வந்தார். ஜப்பான் நாட்டு மன்னர் அமெரிக்காவோடு விரோதம் காண்பித்த தருணத்தில், ஜப்பான் தேசம் சென்று பல இலட்சக்கணக்கான மக்கள் கூடிய சுவிசேஷ கூட்டத்தில் கிறிஸ்துவை அறிவித்தார். அவர் செய்த ஊழியத்தினிமித்தம், பத்தாயிரம் பேருக்கும் மேலான ஜப்பானியர்கள் மனம் மாற்றம் அடைந்தனர்.

*ஊழியத்தின் கடைசி வருடங்களில், மெத்தடிஸ்ட் சபையின் பிஷப்பாக பதவி ஏற்க வற்புறுத்தப்பட்டார். ஆனால் அவரோ அந்த பதவியை மறுத்து, நான் அன்று முதல் இன்று வரை* **'இயேசுவின் அடிமை'** *என தாழ்மையாய் கூறி, விலகி நின்றார்!*

மேலும் அவர் கூறியபோது "இந்திய தேசத்தில் மணப்பெண்ணின் தோழியர், மணமகளை அழைத்து வந்து மணவாளனிடம் ஒப்படைத்து சென்று விடுவார்கள்!". அந்த ஒரு பணியைதான் நான் இன்றுவரை 40-வருடங்களாய் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் ஊழியம் செய்தேன் என்று கிறிஸ்துவுக்கே மலர் அஞ்சலி செலுத்தினார்!

*- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்*

## வாலிபனே 'பிடி சாம்பலாகும்' வாழ்வின் மாயை உணர்வாயாக!

மானிடனாகப் பிறந்து, பூலோக நாடக மேடையில் மாயாஜாலங்கள் புரிந்த மண்ணான மனிதன் நாசியின் சுவாசம் போய், செத்த சவமாகி விட்டான். அவன் இந்த உலகத்திலே போட்ட ஆட்டமும், சாட்டமும் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. அவனுடைய காரியங்களுக்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி விழுந்து விட்டது. செத்த சவமாகிய அவனது அருகில் அவனின் மனையாளும், மக்களும் அமர்ந்து அழுது புலம்புகின்றனர்.

உலகத்தில் அந்த மனிதன் வாழ்ந்த காலத்தில், மக்களுக்கு முன்பாக எத்தனையோ ஜம்பங்கள் பேசி மார் தட்டி நின்றவனை, இப்பொழுது நாலுபேராக சுடுகாட்டிற்கு தூக்கிச் சுமந்து பிடி சாம்பலாக்குவதற்காக சென்று கொண்டிருக்கின்றனர். அங்கே சுடுகாடு தெரிகின்றது. கட்டின மனைவி தன் தாலியை அறுப்பதற்காக சுடுகாட்டில் ஆயத்தமாக அமர்ந்திருக்கின்றாள். அகிலத்தை எல்லாம் ஆளுவேன் என்று ஓர் நாள் மெத்தப்பேசிய, அறிவற்ற பேதை மாந்தன் இன்று பிடி சாம்பலாகப் போகின்றான். அந்த பிடி சாம்பலாவது இறுதியில் மீதியாகுமா? அதுவும்தான் கிடையாது! அதோ சுடுகாட்டிற்கு நடுவாக ஓடும் ஆற்றின் நீர், அதையும்தான் எடுத்து விழுங்கி மண்ணில் போட்டுவிட்டு சென்றுவிடும்.

இரயில் நிலையத்தில் ஏதேனும் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து "இரயில் இன்னும் வரவில்லையா?" என்று கேட்கும்போது, மற்றவர் அவரைப்பார்த்து கைகாட்டி இறங்கிவிட்டது "லைன் கிளியர்" என்று கூறுவதை நாம் கேட்கலாம். அதின் அர்த்தம் என்னவெனில் "இரயில் நிச்சயமாக இரயில் நிலையத்தை விரைந்து நெருங்கிக் கொண்டிருக்கின்றது..... சற்று நேரத்திற்கெல்லாம் அது வந்து சேர்ந்துவிடும்" என்பதுதான்.

வாழ்க்கை பயணம், இந்த ரயில் வண்டிபோல் "கை காட்டி இறங்கியவுடன்" அடுத்த ஸ்டேஷனில் நின்றுவிடுவதாகவே அனைவருக்கும் உள்ளது! வண்டி நிற்பதற்கு முன்பாகவே, தன் ஜீவியத்தில் மனந்திரும்பி நித்தியம் சேர்வதே வாழ்வின் இலட்சியம்!

ஓ வாலிபனே, கை காட்டி இறங்கும் நேரம் யாருக்கும், எப்போதும் நேரலாம்! துரிதமாய், உன் இரட்சகரை அண்டிவந்து, பரம இலக்கை வந்து அடைவாயாக!

- சுவிசேஷ மலர்

**Published and Owned by:**
**MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,**
*Editor* **T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**